# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 395 /ந/2025, நாள் 06.01.2026

C. சின்னத்துரை,
புளியங்குடி, தென்காசி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
புளியங்குடி நகராட்சி, தென்காசி மாவட்டம் – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், புளியங்குடி, அய்யாபுரம், அம்பேத்கர் தெரு, கதவு எண்.44 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. சின்னத்துரை என்பவரது 01.09.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.09.2025 அன்று பெறப்பட்டு, 395/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், புளியங்குடி, அய்யாபுரம், அம்பேத்கர் தெரு, கதவு எண்.44 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. சின்னத்துரை என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ள 01.09.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“கடந்த 15.02.2019ம் தேதி புளியங்குடி நகராட்சியில், பணியில் இருந்த 1வது எதிர்மனுதாரர் திருமதி புஷ்பலதா, பொறியாளர் மற்றும் 2வது எதிர்மனுதாரர் திரு. கணேசன் ஒட்டுனர் ஆகிய இரு எதிர்மனுதாரர்கள், ஆணையாளராக இருந்த பவுன்ராஜ் த/பெ. கருப்பசாமி அவர்களின் 21.02.2019ம் தேதிய புகார் மனுவிற்கு புளியங்குடி காவல்நிலையத்தில் FIR எண்.47/2019–க்கு குற்ற பத்திரிக்கை எண். CC No. 0137 காவல்துறையால் தாக்கல் செய்யப்பட்டது. அதில் மேற்படி 1, 2 எதிர்மனுதாரர்கள் கண்ணால் பார்த்ததாக சாட்சியம் கொடுத்தனர்.

1வது எதிர்மனுதாரர் சாட்சியம்: நான் புளியங்குடி நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். 15.02.2019–ம் தேதி பொறுப்பு புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திரு. பவுன்ராஜ் அவர்களுடன் நானும் மற்றும் நகராட்சி அரசு வாகனத்தின் டிரைவர் திரு. கணேசன் அவர்களுடன் அரசு வாகனமான BOLERO JEEP–ல் மாலை 05.30 மணியளவில் நாங்கள் மூன்று பேரும் அரசு அடையாள அட்டையை வெளியே தெரியும்படி அணிந்து கொண்டு பணிநிமித்தமாக புளியங்குடி நகராட்சி வார்டு 33, அய்யாபுரம் ஊரில் சிறுவர் பூங்காவுக்கு மேல்புறமுள்ள TS No.15/17 அரசுக்கு சொந்தமான நிலத்தில் நகராட்சி சார்பாக குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கும் பணிகளை ஆய்வு செய்ய சென்ற போது, மேற்படி ஊரை சார்ந்த செல்லியரம்மன் கோயில் தெரு, சின்ன மாடன் மகன் செல்லப்பா என்பவரும் அவருடைய மகன் சின்னத்துரை ஆகியோர் சேர்ந்து வந்து ஆணையாளரிடம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கும் இடம்

எனக்கு சொந்தமானது, நான் நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறேன் என்று செல்லப்பா ஆணையாளரை பார்த்து சொல்லியபடியே இருவரும் ஏன்டா, நீ புளியங்குடி ஊருக்குதான்டா கமிசனரு எனக்கு இல்லை, என்னுடைய இடத்தில் ஊருக்காக எப்படி டாங்கு கட்டுவ, யார் உனக்கு அனுமதி கொடுத்தது என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி அவமானம் ஏற்படும்படி இருவரும் சேர்ந்து ஆணையாளரையும் மற்றும் எங்களையும் அரசு பணியை ஆய்வு செய்யவிடாமல் தடுத்ததோடு மட்டுமில்லாமல், கீழே கிடந்த கற்களை எடுத்து வீசி உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று கூறி ஆக்ரோசமாக வந்தார்கள். அப்போது ஆணையாளர் அவர்களிடம், இது அரசுப்பணி, உங்களுக்கு சொந்தமான நிலம் என்றால் கோர்ட்டில் வழக்கு போட்டு தீர்ப்பு பெற்ற பின் வைத்துக்கொள்ளுங்கள். அதுவரை பொதுமக்கள் நலனுக்காக பணிகளை தடுக்காதீர்கள் என்று எடுத்துக் கூறிய போது செல்லப்பா என்பவர் ஆணையாளரை பார்த்து உன்னோட கோர்ட் கேஸ் முடியும் வரை நாங்கள் பொறுமையா இருந்துருவமா. அதுவரை நீ எப்படி பணி செய்கிறாய் என்று பார்ப்போம். அதுவரை உன்னை விட்டு வைத்தாதானே, அதற்குள்ளாக நானும் என் மகனும் சேர்ந்து உன்னையும் உன் குடும்பத்தையும் காலி செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள். அப்போது சம்பவத்தினை நேரில் பார்த்து கொண்டிருந்த நாங்களும் மற்றும் அய்யாபுரம் ஊரைச்சார்ந்த மடத்து தெரு கனகராஜ் மகன் போவாஸ், ஈஸ்வரன் கோயில் தெரு, வெள்ளையன் மகன் நடராஜன் மற்றும் யோவோ மனைவி மேராள் ஆகியோர் செல்லப்பா மற்றும் சின்னத்துரையை பார்த்து சத்தம் போட்டும் இருவரும் கேட்காமல் பிரச்சனை செய்து கொண்டிருந்த போது, எங்களை அவர்கள் தயவு செய்து நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள் இவர்கள் கொலைவெறியுடன் அணுகுகிறார்கள் என்று கூறி எங்களை பத்திரமாக அங்கிருந்து அனுப்பி வைத்தார்கள். பின்னர் ஆணையாளர் அவர்கள் புளியங்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் கேசான விபரம் தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக தாங்கள் என்னை மீண்டும் விசாரிக்காதீர்கள்.

மேற்படி சாட்சியத்தால் 5 ஆண்டுகள் சிவகிரி நீதிமன்றத்தில் வாய்தாவிற்கு சென்றேன். பொறியாளரான 1–வது எதிர்மனுதாரர் சர்வே எண்.729/3 என்பது தனியாருக்கு சொந்தமானது என்பதை அறிந்தவர். மேலும், சிவகிரி உரிமையியல் நீதிமின்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதை அறிந்தவர். வழக்கு எண். OS No.39/2018 இவரே சட்டத்தை மீறி வாட்டர் டேங் கட்ட அனுமதி கொடுத்துள்ளார். மேலும் கட்டிட வேலைகளை பார்வையிட்டதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார். முதல் எதிரியானவர் தனியாருக்கு சொந்தமான இடத்தில் வாட்டர் டேங்க் கட்ட அனுமதித்தது தவறு. வேலைக்கு நிதி ஒதுக்கச் சொன்னது தவறு. வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதில் பணி செய்தது தவறு. ஆனால் பொய்வழக்கிற்கு பொய்யான சாட்சியம், அறிக்கை கொடுத்தது தவறு. இவ்வாறாக 1–வது எதிர்மனுதாரர் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளார். மேலும் நான் ஆணையாளரை தாக்கியதாகவும் அதை மேற்படி 1–வது எதிர்மனுதாரர் பார்த்ததாகவும் பொய்யான அறிக்கை கொடுத்துள்ளார்.

2–வது எதிர்மனுதாரர் சிவகிரி நீதிமன்ற வழக்கு எண். CC No.0137/2019ல் 5–வது கண்ணால் பார்த்த சாட்சியாக வாக்கு மூலம் கொடுத்துள்ளார்.

சாட்சியம் கீழ்க்கண்டவாறு:

2–வது எதிர்மனுதாரர் சாட்சியம்: நான் புளியங்குடி நகராட்சி டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். 15.02.2019–ம் தேதி பொறுப்பு புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திரு. பவுன்ராஜ் அவர்களுடன் நானும் மற்றும் நகராட்சி பொறியாளர் திருமதி. புஷ்பலதா அவர்களுடன் அரசு வாகனமான BOLERO JEEP–ல் மாலை 05.30 மணியளவில் நாங்கள் மூன்று பேரும் அரசு அடையாள அட்டையை வெளியே தெரியும்படி அணிந்து கொண்டு பணிநிமித்தமாக புளியங்குடி நகராட்சி வார்டு 33 அய்யாபுரம் ஊரில் சிறுவர் பூங்காவுக்கு மேல்புறமுள்ள TS No.15/17 அரசுக்கு சொந்தமான நிலத்தில் நகராட்சி சார்பாக குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கும் பணிகளை ஆய்வு செய்ய சென்ற போது, மேற்படி ஊரை சார்ந்த செல்லியரம்மன் கோயில் தெரு, சின்ன மாடன் மகன் செல்லப்பா என்பவரும் அவருடைய மகன் சின்னத்துரை ஆகியோர் சேர்ந்து வந்து ஆணையாளரிடம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கும் இடம் எனக்கு சொந்தமானது, நான் நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறேன் என்று செல்லப்பா ஆணையாளரை பார்த்து சொல்லியபடியே இருவரும் ஏன்டா நீ புளியங்குடி ஊருக்குதான்டா கமிசனரு எனக்கு இல்லை. என்னுடைய இடத்தில் ஊருக்காக எப்படி டாங்கு கட்வியா எவன் உனக்கு அனுமதி கொடுத்தது என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி அவமானம் ஏற்படும்படி இருவரும் சேர்ந்து ஆணையாளரையும் மற்றும் எங்களையும் அரசு பணியை ஆய்வு செய்யவிடாமல் தடுத்ததோடு மட்டுமல்லாமல் கீழே கிடந்த கற்களை எடுத்து வீசி உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேம் என்று

கூறி ஆக்ரோசமாக வந்தார்கள். அப்போது ஆணையாளர் அவர்களிடம், இது அரசுப்பணி, உங்களுக்கு சொந்தமான நிலம் என்றால் கோர்ட்டில் வழக்கு போட்டு தீர்ப்பு பெற்ற பின் வைத்துக்கொள்ளுங்கள். அதுவரை பொதுமக்கள் நலனுக்காக பணிகளை தடுக்காதீர்கள் என்று எடுத்துக் கூறிய போது செல்லப்பா என்பவர் ஆணையாளரை பார்த்து உன்னோட கோர்ட் கேஸ் முடியும் வரை நாங்கள் பொறுமையா இருந்துருவமா. அதுவரை நீ எப்படி பணி செய்கிறாய் என்று பார்ப்போம். அதுவரை உன்னை விட்டு வைத்தாதானே, அதற்குள்ளாக நானும் என் மகனும் சேர்ந்து உன்னையும் உன் குடும்பத்தையும் காலி செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள். அப்போது சம்பவத்தினை நேரில் பார்த்து கொண்டிருந்த நாங்களும் மற்றும் அய்யாபுரம் ஊரைச்சார்ந்த மடத்து தெரு, கனகராஜ் மகன் போவாஸ், ஈஸ்வரன் கோயில் தெரு, வெள்ளையன் மகன் நடராஜன் மற்றும் யோவோ மனைவி மேராள் ஆகியோர் செல்லப்பா மற்றும் சின்னத்துரையை பார்த்து சத்தம் போட்டும் இருவரும் கேட்காமல் பிரச்சனை செய்து கொண்டிருந்த போது எங்களை அவர்கள் தயவு செய்து நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள் இவர்கள் கொலைவெறியுடன் அணுகுகிறார்கள் என்று கூறி எங்களை பத்திரமாக அங்கிருந்து அனுப்பி வைத்தார்கள். பின்னர் ஆணையாளர் அவர்கள் புளியம்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் கேசான விபரம் தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக தாங்கள் என்னை மீண்டும் விசாரிக்காதீர்கள்.

1 மற்றும் 2–வது எதிர்மனுதாரர்கள் என்னை யார் என்றே தெரியாதவர்கள். இவர்கள் அனைவரும் பொய் சாட்சியம் கொடுத்ததால் நான் 5 ஆண்டுகள் செய்யாத குற்றத்திற்காக நீதிமன்றம் சென்று மன உளைச்சலும் பொருளாதார இழப்பும் ஏற்பட்டது. மேலும் 24.02.2019–ம் தேதி தினமலர் பத்திரிக்கை செய்தியில் வெளிவந்ததால் நான் மிகப்பெரிய அவமானத்திற்கு உள்ளானேன். இதில் 5 ஆண்டுகள் மன உளைச்சலுடன் வாழ்ந்து வந்தேன். எனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பொய் புகார்தாரர் K.பவுன்ராஜ் 1, 2 எதிர்மனுதாரர்கள் பொய்யானவர்கள் என CRLOP MD No.8869-2019 உயர்நீதிமன்ற கிளை மதுரையில் வழக்கு தொடர்ந்து நீதி பெற்றேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு, தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், 2019–ஆம் ஆண்டு நிகழ்வு குறித்து புகாரளித்திருப்பது அறிய முடிகிறது.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (c) ன்படி பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

Sec. 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to.-

(a) Xxxxxx

(b) Xxxxxx

(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurrence is said to have taken place.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (c) ன்படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்று ஐந்தாண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு என்பதால், மனுதாரரின் புகார் மனுமீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 6–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. C. சின்னத்துரை,
எண்.44, அம்பேத்கர், அய்யாபுரம் ,
புளியங்குடி, தென்காசி மாவட்டம்,

2) நகராட்சி ஆணையர்,
புளியங்குடி நகராட்சி,
தென்காசி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

7/1/26